**தலைப்பு 227 - ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 227 - ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 18 ஆம் திகதி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தீயோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 674.58 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 667.80 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 6.78 மில்லியன் அதாவது 1.01 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 571.24 | 566.93 | 4.31 | 0.75 |
| மூலதன | 103.34 | 100.87 | 2.47 | 2.39 |
| மொத்தம் | 674.58 | 667.80 | 6.78 | 1.01 |

### 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக வருமானக் குறியீடு 20.03.02.03 இற்காக கூட்டுமொத்தமாக ரூபா 140 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 172 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 22.93 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 20.03.02.03 | 140.00 | 172.10 | 32.10 | 22.93 |

### 2.3 முற்பணக் கணக்கு

#### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 23.43 | 22.08 | 16.00 | 18.86 | 65.00 | 47.54 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0033/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 2.89 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.38 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0055/000 | 2.72 |
| 6000/0000/00/0002/0073/000 | 0.12 |
| 6000/0000/00/0016/0023/000 | 3.51 |
| 6000/0000/00/0018/0030/000 | 0.03 |
| மொத்தம் | 6.38 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் தொடர்பான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கட்டுநிதிகள் திணைக்களத்திற்கு போதியளவான பிரகாரம் வழங்கப்படாமையால் 10 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிஏற்பாட்டை பயன்படுத்த முடியாதிருந்தமையால் அந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 வருமானக் கணக்கு

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.03 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரியதாக ரூபா 140 மில்லியன் வருமானமொன்றைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 172 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட 23 சதவீதத்தினால் விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 172.10 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது 69.64 மில்லியன் அதாவது 68 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

22701 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 644,054 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 11 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த

மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் மிகை, பற்றாக்குறை மற்றும் சிபாரிசுகள் தொடர்பாக 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அந்த சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 பெப்ரவரி 26 இல் உள்ளவாறு முன்னைய மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அழிவடையச் செய்யவேண்டிய பொருட்கள், பழுதுபார்க்கப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டிய பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை | | |
| (i) 5.4.10 வழிகாட்டி | 4,425,000 | கொள்வனவு நிறுவனத்தைப் பாதுகாப்பதற்காக ஒப்பந்தத் தொகையில் 10 சதவீத பெறுமதிக்குச் சமமான செயலாற்றல் காப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 50 கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட 02 கொள்வனவு சந்தர்ப்பங்களின் போது உரிய செயலாற்றல் காப்பீடொன்று பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 6.3.3(அ) வழிகாட்டி | 1,430,000 | ADF ஸ்கேன் இயந்திரம் (நுட்ப இயந்திரம்) கொள்வனவு செய்வதற்குரிய கொள்வனவுச் செயற்பாடுகளின் போது கூறுவிலை திறக்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 6.3.6 வழிகாட்டி | 1,430,000 | திணைக்களத்தின் ஒரு நாள் சேவை பிரிவிற்குத் தேவையான டொட் பிரின்டர்ஸ், றிபன் மற்றும் ADF ஸ்கேன் இயந்திரம் (நுட்ப இயந்திரம்) கொள்வனவு செய்யும் கொள்வனவுச் செயற்பாடுகளுக்குரிய கேள்வி திறத்தல் மாதிரிப் படிவம் மற்றும் அறிக்கைக் குறிப்புக்களில் எந்தவொரு அங்கத்தவரின் பெயரோ அல்லது கையொப்பமோ இடப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டம் 2009 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் மீண்டும் அந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 2011 ஆகஸ்ட் 17 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் ஆரம்ப மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 14,500 மில்லியனாக இருந்தது. பின்னர் அது ரூபா 8,000 மில்லியன் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 வரையில் ரூபா 755.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பிரஜைகளின் தரவுகளை உள்ளடக்கிய அடையாள அட்டை ஸ்கேன் செய்யப்பட்டு தரவுகளை இலத்திரனியமயப்படுத்துதல் மற்றும் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகிர்ந்தளித்தல் தொடர்பான சேவைகள் கட்டம் I இன் கீழ் ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தது. 2014 யூலை 10 ஆந் திகதி பிரஜைகளின் தரவுகளைச் சேகரிப்பதற்கு சனாதிபதி செயற்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் தென் மாகாணத்தின் 27 பிரதேச செயலகங்களில் 2014 செப்தெம்பர் மாதத்தின் போது அடிப்படைத் தரவுகளைச் சேகரிப்பதற்கு தீர்மானித்து நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் தரவுகளைச் சேகரிப்பதற்காக 491,975 விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் 275,000 விண்ணப்பங்கள் அதாவது விநியோகிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 55.8 சதவீதமான விண்ணப்பங்கள் மீளப் பெறப்பட்டிருந்தன. தென் மாகாணத்தின் 6 பிரதேச செயலகங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களைப் பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பிரதேச செயலகம் | 15 வயதிற்கு மேற்பட்டவர்களின் சனத்தொகை | தரவு சேகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 15 வயதிற்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை சதவீதமாக |
|---|---|---|---|
| கடவத்சதர | 84,200 | 528 | 0.63 |
| இமதுவ | 34,323 | 1,999 | 5.82 |
| கறன்தெனிய | 47,770 | 22,272 | 46.62 |
| கோனாபீனுவல | 18.188 | 1,120 | 6.16 |
| மாலிம்பட | 29,068 | 1,392 | 4.79 |
| கிரிந்தபுஹுல்வெல்ல | 16,560 | 5,055 | 30.53 |

மேற்குறிப்பிட்ட பிரதேச செயலகங்களில் தரவு சேகரிக்கப்பட்ட அளவு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) நாட்டின் சகல மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 331 பிரதேச செயலகங்களுக்காக பூர்த்தி செய்யப்பட்ட தரவுகளை உள்ளடக்கிய விண்ணப்பங்களை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கு ரூபா 94,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தென் மாகாணத்தில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டமையின்

அடிப்படையில் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,086,540 தொகை அதாவது நிதி ஏற்பாட்டில் 1.1 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டம், ஆட்பதிவு அதிகாரச்சட்டத்தில் இலத்திரனியல் தரவுகளைச் சேகரிப்பதற்கும், அதிகாரச்சட்டத்திற்குரிய ஏனைய திருத்தங்கள் தொடர்பாக பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் தாமதமாகியதன் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் மெதுவான நிலையில் காணப்பட்டது. இது தொடர்பாக சட்ட வரைஞர் திணைக்களத்தின் சிபாரிசு பெறப்பட்டு அது அமைச்சரவையினதும் பாராளுமன்றத்தினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாக ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அடையாள அட்டைகளை அச்சிடுவதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அச்சிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பயன்படுத்தப்படுகின்ற அட்டைகளில் 10 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதமொன்று வீண்விரயமாகியிருந்ததுடன் 2015 ஆண்டின் போது அச்சிடப்பட்ட 717,941 அட்டைகளில் 88,347 அட்டைகள் அதாவது 12 சதவீதம் வீண்விரயமாகியிருந்தது.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 24 | 1 |
| (ii) | மூன்றாம் நிலை | 4 | 2 | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,195 | 1,027 | 168 |
| (iv) | ஆரம்ப நிலை | 142 | 127 | 15 |
| | **மொத்தம்** | **1,366** | **1,180** | **186** |